# வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் தவணைப் பரீட்சை, யூலை - 2019

FWC

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, July - 2019**

| தரம் :- 12 (2020) | 21 | T | I,II | பொருளியல் | நேரம் :- மூன்று மணித்தியாலம் |
|---|---|---|---|---|---|

## பகுதி I

**அறிவுறுத்தல்கள்**

- எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.
- சரியான விடைக்குரிய இலக்கத்தினை தெரிவு செய்க. (விடையளிப்பதற்கு பல்தேர்வு விடைத்தாள் வழங்கப்படும்)

01. பொருளாதார வளங்கள் என்பது தொடர்பாக உம்மால் ஏற்றுக்கொள்ளக்கூடியது எது?
 1) மாற்றுபயோகமுடையது  2) அருமைத்தன்மை கொண்டது
 3) உற்பத்தி செய்வதன் மூலம் பெறப்படும்  4) தனியார் உரிமை பாராட்டக்கூடியது
 5) நிரம்பல் நெகிழ்வற்றது

02. குறித்த நடவடிக்கையொன்றின் பொருளாதார ரீதியான தீர்மானமெடுத்தலின்போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பில் சரியானது எது?
 1) வள அருமையும் அமையச்செலவும்
 2) வள அருமையும் மாற்றுப்பயன்பாடும்
 3) எல்லை நன்மைகளும் எல்லைச்செலவும்
 4) வள அருமையும் தெரிவுகளும்
 5) எல்லையற்ற விருப்பங்களும் வரையறுக்கப்பட்ட வளங்களும்.

03. குத்தச்சில் உணவினையும் கிடையச்சில் உடையையும் உற்பத்தி செய்யக்கூடிய நாடொன்றினது உற்பத்திச்சாத்திய வளையி மூலப்புள்ளிக்கு குவிவான வடிவத்தில் அமையுமாயின் பின்வருவனவற்றுள் சரியானது,
 1) மேலதிக ஒரு அலகு உணவு உற்பத்திக்காக இழக்கப்படும் உடை அலகுகளின் விகிதம் நிலையாகவுள்ளது.
 2) மேலதிக ஒரு அலகு உடை உற்பத்திக்காக இழக்கப்படும் உணவு அலகுகளின் விகிதம் நிலையாகவுள்ளது.
 3) மேலதிக ஒரு அலகு உணவு உற்பத்திக்காக இழக்கப்படும் உடை அலகுகளின் விகிதம் குறைவடைந்து செல்கிறது.
 4) மேலதிக ஒரு அலகு உடை உற்பத்திக்காக இழக்கப்படும் உணவு அலகுகளின் விகிதம் அதிகரித்துச் செல்கிறது.
 5) மேலதிக ஒரு அலகு உடை உற்பத்திக்காக இழக்கப்படும் உணவு அலகுகளின் விகிதம் குறைவடைந்து செல்கிறது.

agaram.lk

04. உலகில் கலப்புப்பொருளாதாரங்கள் உருவாகியமைக்கான காரணங்களிலொன்றாக எதனை தெரிவு செய்வீர்?
1) சந்தைப்பொருளாதாரத்தில் விலைப்பொறிமுறை தோல்வியடையக்கூடிய சந்தர்ப்பங்கள்.
2) முதலாளித்துவ பொருளாதாரங்களில் தனியார் சொத்துரிமை ஆதரிக்கப்படாமை.
3) இலாப நோக்குடைய பொருளாதார தீர்மானங்கள் எப்போதுமே பிரதிகூலமானதாக இருத்தல்.
4) சந்தை முறைமைகளில் வள ஒதுக்கீடுகள் வினைத்திறன் வாய்ந்ததாக இருத்தல்.
5) சந்தை முறைமையில் காணப்பட்ட உயர்வான போட்டிநிலை நுகர்வோனது நலனை பாதித்தல்.


05. வருமான விளைவு மற்றும் பதிலீட்டு விளைவுகளின் தாக்கம் சாதாரண பண்டமொன்றுக்கான கேள்விக்கோட்டின் எத்தகைய மாற்றங்களின் மூலம் காட்டப்படுகிறது.
1) கேள்விக்கோட்டினது வலப்புறமான நகர்தல்
2) கேள்விக்கோட்டினது இடப்புறமான நகர்தல்
3) கேள்விக்கோட்டினது வலப்புறமான அல்லது இடப்புறமான நகர்தல்
4) ஒரு கேள்விக்கோட்டின் மீதுள்ள புள்ளியிலிருந்து இன்னொரு கேள்விக்கோட்டின் மீதான புள்ளிக்கு நகர்வடைதல்
5) ஒரு கேள்விக்கோட்டின் மீதுள்ள புள்ளிகளின் நகர்தல்

06. பண்டமொன்றிற்கான விலைசார் கேள்வி நெகிழ்வற்றதாக அமைவதில் தாக்கம் செலுத்தும் காரணி யாது?
1) குறித்த பண்டம் அதிகளவான பிரதியீடுகளை கொண்டதாக இருத்தல்.
2) குறித்த பொருளின் நுகர்வுக்காக வருமானத்தில் மிகச்சிறிய சதவீதம் செலவிடப்படுதல்.
3) உற்பத்திகளிடையே காரணிகளின் அசைவு இலகுவாக்கப்படல்
4) அத்தியாவசியமற்ற பண்டமாக அமைதல்
5) விலை மாற்றமடைந்ததன் பின்னர் கடந்துள்ள காலம் நீண்டதாயிருத்தல்

agaram.lk


07. சாதாரண பண்டமொன்றிற்கான நேர்கோட்டு வடிவ கேள்விக்கோடு முன்னைய நிலையிலிருந்து இடப்புறமாக நகர்வடைந்தமைக்கான காரணம் தொடர்பில் சரியானது எது?
1) குறித்த பண்டத்தினது விலையில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டமை
2) குறித்த பொருளின் உற்பத்திக்காக விசேட மானியம் வழங்கப்பட்டமை
3) குறிப்பிட்ட பண்டத்தினது உற்பத்திச்செலவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி
4) குறித்த பண்டத்தினது நுகர்வு மீது வரிவிதிக்கப்பட்டமை
5) பொருளுற்பத்திக்கான உள்ளீடுகளின் விலையிலேற்பட்ட அதிகரிப்பு

08. பண்டமொன்றிற்கான நேர்கோட்டு வடிவ நிரம்பல் கோடு கீழே தரப்பட்டுள்ளது. குறித்த நிரம்பல் கோட்டிற்கான சமன்பாடு யாது?





1) QS = 10 + 0.5P
2) AS = 10 + 2P
3) QS = 20 + 10P
4) QS = 10 – 20P
5) QS = – 20 + 10P

09. கீழே தரப்பட்டுள்ள பண்டமொன்றினது கேள்விக்கோட்டில் A புள்ளியில் விலைசார் கேள்வி நெகிழ்ச்சி - 1.5 ஆகும். 10 ரூபா விலையில் கேள்வி நெகிழ்ச்சி யாதாக அமையும்?




1) − 2.5
2) − 0.4
3) − 0.25
4) − 1.00
5) − 2.00

10. பண்டமொன்றிற்கான சந்தைச்சமநிலையை வரைபடம் காட்டுகின்றது.




சமநிலை தொகைக்காக நுகர்வோன் செலுத்த எதிர்பார்த்த பணத்தொகை விற்பனையாளன் எதிர்பார்த்த பணத்தொகை என்பனவற்றை சரியானதாக தரும் விடை எது?

| நுகர்வோன் செலுத்த எதிர்பார்த்த பணத்தொகை | விற்பனையாளன் எதிர்பார்த்த பணத்தொகை |
|---|---|
| 1) 450 | 300 |
| 2) 300 | 450 |
| 3) 900 | 1050 |
| 4) 900 | 600 |
| 5) 1050 | 600 |

agaram.lk

11. பண்டமொன்றின் உற்பத்தி மீது அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அலகு வரியின் அளவினால் குறித்த பொருளின் விலை அதிகரிக்கக்கூடிய சந்தர்ப்பம் எது?
1) குறித்த பண்டம் நெகிழ்ச்சியற்ற கேள்வியையும் நெகிழ்ச்சியுள்ள வழங்கலையும் கொண்டிருத்தல்.
2) குறித்த பண்டம் நெகிழ்ச்சியற்ற நிரம்பலையும் நெகிழ்ச்சியுள்ள கேள்வியையும் கொண்டிருத்தல்.
3) பண்டம் முற்றாக நெகிழ்ச்சியற்ற கேள்வியையும் நெகிழ்ச்சியுள்ள நிரம்பலையும் கொண்டிருத்தல்.
4) பண்டம் பூரண நெகிழ்ச்சியுள்ள கேள்வியையும் நெகிழ்ச்சியுள்ள நிரம்பலையும் கொண்டிருத்தல்.
5) குறித்த பண்டம் நெகிழ்ச்சியற்ற கேள்வியையும் நெகிழ்ச்சியற்ற வழங்கலையும் கொண்டிருத்தல்.

12. போட்டிச்சந்தையிலுள்ள அத்தியாவசிய பண்டமொன்றிற்கு உயர்ந்தபட்ச கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டு மிகைக்கேள்வி இறக்குமதி செய்யப்படுமாயின் ஏற்படக்கூடிய மாற்றம் தொடர்பில் சரியானதை தெரிவு செய்க.

| | **பரிமாற்றல் தொகை** | **நுகர்வோன் மிகை** | **வழங்குநர் மிகை** |
|---|---|---|---|
| 1) | அதிகரிக்கும் | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 2) | அதிகரிக்கும் | அதிகரிக்கும் | குறைவடையும் |
| 3) | குறைவடையும் | குறைவடையும் | குறைவடையும் |
| 4) | குறைவடையும் | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 5) | குறைவடையும் | அதிகரிக்கும் | மாற்றில்லை |

13. நிறுவனமொன்று குறுங்காலத்தில் தனது வெளியீடுகளை படிப்படியாக அதிகரிக்கையில் அதன் சராசரி மாறும் செலவு மற்றும் எல்லைச்செலவு தொடர்பில் பொருத்தமற்ற விடை எது?
   1) எல்லைச்செலவும் சராசரி மாறும் செலவும் அதிகரிக்கையில் சராசரி மாறும் செலவு அதிகரிக்கும் வேகத்தை காட்டினும் எல்லைச்செலவு அதிகரிக்கும் வேகம் அதிகம்
   2) எல்லைச்செலவின் இழிவுப்புள்ளியை சராசரி மாறும் செலவுக்கோடு வெட்டிச்செல்வதாக அமையும்
   3) எல்லைச்செலவும் சராசரி மாறும் செலவும் குறைவடைகையில் சராசரி மாறும் செலவு குறையும் வேகத்தை காட்டினும் எல்லைச்செலவு குறையும் வேகம் அதிகம்
   4) சராசரி மாறும் செலவின் அதிதாழ் நிலையில் எல்லைச்செலவு சராசரி மாறும் செலவிற்கு சமமாக அமையும்
   5) சராசரி மாறும் செலவு மற்றும் எல்லைச்செலவு என்பன ஆரம்பத்தில் குறைவடைந்து பின்னர் அதிகரிக்கும்

agaram.lk

14. நிறுவனமொன்றினது உற்பத்திச்செலவுகள் பற்றிய விளக்கத்தில் ஆழ்ந்த செலவுகள் என்பன பற்றி சரியான விடையாக அமைவது எது?
   1) நிலையான சாதனங்கள் மீதான மீளப்பெறமுடியாத செலவுகளாகும்
   2) நிறுவனமொன்றினது சராசரி மாறும் செலவினது இழிவுநிலை செலவாகும்
   3) உற்பத்தியில் பயன்படுத்தப்படும் சகல நிலையான உள்ளீடுகளுக்குமான பெறுமானத் தேய்வாகும்
   4) நிறுவனத்திற்கு சொந்தமான காரணிகளின் பொருட்டு ஏற்பட்ட செலவுகளாகும்
   5) நீண்டகால உற்பத்தியிலேற்படும் பெறுமானத்தேய்வுகள்

15. குறுங்காலத்தில் நிறைபோட்டி நிறுவனமொன்றினது தரவுகள் சில கீழே தரப்பட்டுள்ளன. 5 வது அலகு வெளியீட்டில் சராசரி மாறும் செலவு யாது?

| வெளியீடுகள் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| மொத்தச்செலவு | 80 | 95 | 105 | 125 | 165 |
| எல்லைச்செலவு | 25 | 15 | 10 | 20 | 40 |

1) 11 ரூபா
2) 08 ரூபா
3) 33 ரூபா
4) 22 ரூபா
5) 165 ரூபா

16. பொருளாதாரமொன்றினது வர்த்தக சகடவோட்டத்தினால் விளக்கப்படுவது தொடர்பில் நீர் தவறு என கருதும் விடை எது?

1) மெய்யுற்பத்தியின் போக்கு உத்தம உற்பத்தியுடன் ஒப்பீடு செய்யப்படுவதாக அமைகின்றது
2) பொருளாதார பின்னடைவு, பொருளாதார மந்தம், செழிப்பு போன்ற நிலைகளை விளக்குகின்றது
3) மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் போக்கினை காலத்துடன் தொடர்புபடுத்தி விளக்குவதாக அமைகின்றது.
4) உண்மை உற்பத்தியில் ஏற்படுகின்ற தளம்பல் நிலைகளை விளக்குவதாக அமைகின்றது
5) வர்த்தக மாற்று விகித விளைவுகளை விளக்குகின்றது

17. பொருளாதாரமொன்றினது வருமானம் மற்றும் செலவுச்சுற்றோட்டத்தில் இருந்தான வெளிப்பாய்ச்சலாக கூறக்கூடிய விடை எது?

1) அரசினது நுகர்வுச்செலவுகள்
2) முதலீட்டு செலவுகள்
3) தேறிய ஏற்றுமதி
4) அரசினது தேறிய வரிகள்
5) பொருட்கள் சேவைகளின் ஏற்றுமதி வருவாய்கள்

18. பின்வருவனவற்றுள் மொத்த கூட்டிய பெறுமதி என்பதனை மிகச்சரியானதாக குறிப்பிடும் விடை எது?

1) ஒரு பொருளாதாரத்தினது மொத்த உற்பத்திப்பெறுமதியிலிருந்து இடைநிலை உள்ளீடுகளின் பெறுமதிகள் கழிக்கப்பட்டு பெறப்படுவது
2) ஒரு பொருளாதாரம் உற்பத்தி செய்த எல்லாப்பொருட்கள் சேவைகளினதும் பணப்பெறுமதி
3) ஒரு பொருளாதாரம் உற்பத்தி செய்த எல்லாப்பொருட்கள் சேவைகளினதும் பணப்பெறுமதியுடன் அவ்வுற்பத்தி மீதான தேறிய வரிகளையும் உள்ளடக்கிய இடைநிலை உள்ளீடுகளின் பணப்பெறுமதியாகும்.
4) ஒரு பொருளாதாரம் உற்பத்திக்காக உருவாக்கிய இடைநிலை உள்ளீடுகளின் பணப்பெறுமதி.
5) ஒரு பொருளாதாரம் உற்பத்தி செய்த எல்லாப்பொருட்கள் சேவைகளினதும் பணப்பெறுமதியுடன் உற்பத்தி மீதான ஏனைய வரிகள் கழிக்கப்பட்ட பெறுமதியாகும்.

agaram.lk

19. எளிய பொருளாதாரமொன்றின் நுகர்வு $C = 400 + 0.6Y$ ஆகும். இப்பொருளாதாரத்தினது சமநிலை மட்ட தேசிய வருமானம் 2000 மில்லியன் என தரப்படுமாயின் முதலீட்டு மட்டத்தினது அளவு யாது?

1) 300 மில்லியன்
2) 500 மில்லியன்
3) 400 மில்லியன்
4) 600 மில்லியன்
5) 200 மில்லியன்

20. நுகர்வுச்சார்பு $45^\circ$ கோட்டுக்கு கீழே காணப்படும் போது, வீட்டுத்துறை

1) செலவிடத்தக்க வருமானம் முழுவதும் நுகர்வுக்காக செலவழிப்பர்.
2) செலவிடத்தக்க வருமானத்தை காட்டிலும் கூடுதலாக நுகர்வு செய்வார்.
3) அதிகரிக்கும் வருமானம் முழுவதையும் சேமிப்பார்.
4) எதுவிதமான சேமிப்பிலும் ஈடுபடமாட்டார்.
5) அவர்களின் செலவிடத்தக்க வருமானத்தில் ஒரு பகுதியை சேமிப்பர்

## பகுதி II

❖ **விரும்பிய நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.**

01. 1) அமையச் செலவு எனும் பதத்தை வரைவிலக்கணப்படுத்துக. அது ஏற்படுவதற்கான காரணங்கள் எவை? (4 புள்ளிகள்)

2) பொருளாதாரத்தீர்மானங்களை எடுக்கும் பொறிமுறையினடிப்படையில் பொருளாதார முறைமைகளை இனங்காண்க. (4 புள்ளிகள்)

3) உற்பத்தியில் வினைத்திறனடைதல் மற்றும் வள ஒதுக்கீட்டில் வினைத்திறனடைதல் ஆகியவற்றின் பொருட்டு ஒவ்வொரு பொருளாதாரங்களும் எத்தகைய நிபந்தனைகளை நிறைவு செய்தல் வேண்டும். (4 புள்ளிகள்)

4) பின்வரும் விடயங்களை உற்பத்திச்சாத்திய வளையியின் உதவியுடன் விளக்குக.

அ) பொருளாதாரத்திற்கு வெளிநாட்டு முதலீடுகளின் உள்வருகை அதிகரித்தல்.

ஆ) உள்ளீடுகளின் விளைதிறன் முன்னரிலும் பார்க்க உயர்வடைதல்.

இ) விவசாய நிலங்கள் துண்டாடப்பட்டு கட்டடங்கள் அமைக்க பயன்படுத்தப்பட்டமை.

ஈ) உள்ளீடுகளிலிருந்து மிகக்கூடிய உச்சவெளியீடுகளை பெறும் நிலை (4 புள்ளிகள்)

5) பெரும்பாலான நாடுகளின் உற்பத்திச்சாத்திய வளையிகள் வெளிநோக்கிய குவிவான வடிவினதாக காணப்படுவதற்கான காரணங்கள் யாவை? (4 புள்ளிகள்)

02. 1) அ) விலை மாற்றம் ஒன்றினது வருமான விளைவு மற்றும் பதிலீட்டு விளைவு ஆகிய எண்ணக்கருக்களை விளக்குக. (4 புள்ளிகள்)

ஆ) சாதாரண பண்டமொன்று தொடர்பில் விலைமாற்றமொன்றினது வருமான விளைவு மற்றும் பதிலீட்டு விளைவுகள் எவ்வாறு அமைகின்றன. (2 புள்ளிகள்)

2) பண்டமொன்றிற்கான சந்தை நிரம்பற்கோடு இடப்புறமாக நகர்வடைந்தமையில் செல்வாக்குடைய காரணிகளை இனங்காண்க. (3 புள்ளிகள்)

3) பண்டமொன்றிற்கான சுதந்திரமான சந்தைச்சமநிலையில் காணப்படக்கூடிய பண்புகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

4) நேர்கோட்டு வடிவ கேள்வி மற்றும் நிரம்பல் கோடுகளைக் கொண்ட பண்டமொன்றிற்கான தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| விலை (ரூபா) | கேள்வித்தொகை | நிரம்பல்த்தொகை |
|---|---|---|
| 10 | 500 | 100 |
| 50 | 100 | 500 |

அ) கேள்வி மற்றும் நிரம்பல் கோடுகளிற்கான சமன்பாடுகளை பெறுக. (2 புள்ளிகள்)

ஆ) சமன்பாடுகளை தீர்ப்பதன் மூலம் பொருளிற்கான சமநிலை விலை மற்றும் சமநிலைத்தொகை என்பனவற்றை கணிக்குக. (2 புள்ளிகள்)

இ) மேற்படி சமநிலையினை வரைபடமொன்றில் காட்டுக. (2 புள்ளிகள்)

ஈ) சமநிலை விலையில் கேள்வி மற்றும் நிரம்பல் நெகிழ்ச்சி யாது? (2 புள்ளிகள்)

03. 1) பண்டமொன்றினது உற்பத்திக்காக மானியம் வழங்குவதனால் அப்பண்டத்திற்கான சந்தையில் ஏற்படக்கூடிய விளைவுகள் நான்கு தருக. (4 புள்ளிகள்)

2) உயர்ந்த பட்ச விலைக்கட்டுப்பாடு என்றால் என்ன உதாரணம் தருக. (3 புள்ளிகள்)

agaram.lk

3) பண்டமொன்றிற்கான கேள்விக்கோடு Qd = 160 – 4P என்ற சமன்பாட்டினாலும் வழங்கல்கோடு QS = - 30 + 6P என்ற சமன்பாட்டினாலும் தரப்பட்டுள்ளது. இப்பண்டத்தினது உற்பத்தி மீது அரசு ரூபா 10 ஐ அலகு வரியாக விதிப்பதாக கொள்க.

அ) வரி விதிப்பதனால் பண்டத்திற்கான சந்தை விலையிலும் தொகையிலும் ஏற்படக்கூடிய மாற்றம் யாது? (4 புள்ளிகள்)

ஆ) வரி விதிப்பதனால் நுகர்வோன் மிகையிலேற்பட்ட மாற்றம் யாது? (3 புள்ளிகள்)

இ) வரிவிதிப்பதனால் உற்பத்தியாளன் மிகையிலேற்பட்ட மாற்றம் யாது? (3 புள்ளிகள்)

ஈ) மேற்படி அரச தலையீட்டினால் ஏற்படக்கூடிய மீளமுடியாத இழப்பு யாது? (3 புள்ளிகள்)

04. 1) குறுங்கால உற்பத்தி தொழிற்பாடு மற்றும் நீண்டகால உற்பத்தி தொழிற்பாடு ஆகியவற்றை வேறுபடுத்தி விளக்குக. (4 புள்ளிகள்)

2) அளவுத்திட்ட விளைவு மற்றும் அளவுத்திட்ட சிக்கனம் ஆகிய எண்ணக்கருக்களை விளக்குக. (4 புள்ளிகள்)

3) குறுங்கால உற்பத்திக்கான நிறுவனமொன்றினது நிலையான செலவுகள் மற்றும் மாறும் செலவுகள் என்பனவற்றை உதாரணங்களின் உதவியுடன் வரையறுக்குக. (4 புள்ளிகள்)

4) குறுங்கால உற்பத்தியில் நிறைபோட்டித்தொழிலிலுள்ள நிறுவனமொன்றினது எல்லா வெளியீட்டு மட்டங்களிலும் அதன் எல்லை வருமானம் ஒரேயளவினதாக இருப்பது ஏன்? (4 புள்ளிகள்)

5) சிலருரிமை சந்தையொன்றினை இனங்காண்பதற்கு துணைபுரியும் பண்புகளைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

agaram.lk

05. 1) உற்பத்தி எல்லை என்பதை வரையறுத்து, உற்பத்தி எல்லையினுள் அடங்குகின்ற பொருளாதாரச் செயற்பாடுகள் சிலவற்றை குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

2) அவதானிக்க முடியாத பொருளாதார நடவடிக்கைகளின் இரு பிரிவுகளும் யாவை? விளக்குக. (5 புள்ளிகள்)

3) மொத்த உள்நாட்டு உற்பத்தியை கணிப்பிடும் போது கைவிடப்படும் கொடுக்கல் வாங்கல்கள் எவை? (4 புள்ளிகள்)

4) குறித்த வருடத்தில் பொருளாதாரமொன்றினது கற்பனைத்தரவுகள் பில்லியன் ரூபாய்களில் தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| தேறிய தொழிற்பாட்டு மிகை | 60 |
| ஊழியர் இழப்பீடு | 140 |
| கலப்பு வருமானம் | 30 |
| நிலையான மூலதன நுகர்வு | 40 |
| உற்பத்தி மீதான உதவு தொகை கழித்த ஏனைய வரிகள் | 20 |
| தேறிய வெளிநாட்டு முதன்மை வருவாய் | (-20) |
| தேறிய நேரில் வரிகள் | 10 |

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

அ) அடிப்படை விலைகளில் மொத்தக்கூட்டிய பெறுமதி (2 புள்ளிகள்)

ஆ) சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு வருமானம் (2 புள்ளிகள்)

இ) மொத்தத்தேசிய வருமானம் (2 புள்ளிகள்)

*06. 1)* பேரினப்பொருளாதார சமநிலையொன்றினது எளிய பொருளாதார மாதிரியினை வரைபடமொன்றினது உதவியுடன் விளக்குக. *(5 புள்ளிகள்)*

*2)* எளிய பொருளாதாரமொன்றின் முதலீட்டுப்பெருக்கி, அப்பொருளாதாரத்தினது எல்லை நுகர்வு நாட்டத்துடன் எத்தகைய தொடர்பினை கொண்டுள்ளது? விளக்குக. *(4 புள்ளிகள்)*

*3)* பொருளாதாரமொன்றினது அரச கொள்வனவுகளில் ஏற்படும் அதிகரிப்பு அப்பொருளாதாரத்தினதும் சமநிலை வெளியீட்டில் ஏற்படுத்தக்கூடிய மாற்றத்தினை வருமான மற்றும் செலவீட்டு அணுகுமுறையிலான வரைபடமொன்றை பயன்படுத்தி விளக்குக. *(4 புள்ளிகள்)*

*4)* மூடப்பட்ட பொருளாதாரமொன்றினது தரவுகள் பில்லியன்களில் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| நுகர்வுச்சார்பு | $C = 400 + 0.8\ yd$ |
| முதலீட்டுசார்பு | $I = 200$ |
| அரசாங்க கொள்வனவுகள் | $G = 180$ |
| வரி | $T = 100$ |

அ) தன்னிச்சையான செலவுகளின் கூட்டுத்தொகை யாது? *(2 புள்ளிகள்)*

ஆ) சமநிலைத்தேசிய வருமான மட்டத்தினைகணிப்பிடுக. *(2 புள்ளிகள்)*

இ) இப்பொருளாதாரத்தினது வருமான மட்டத்தினை மேலும் 100 பில்லியனால் அதிகரிப்பதற்கு வரியில் எத்தகைய மாற்றத்தினை ஏற்படுத்துதல் வேண்டும்? *(2 புள்ளிகள்)*

agaram.lk